பேராசிரியர் முனைவர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழியல் ஆய்வில் ஒரு நிறுவனம். இவரது பணிகள் பன்முகப் பரிமாணம் கொண்டவை. குறிப்பாகப் பல்கலைக்கழகத்தைச் சமூகத்துடன் இணைத்துப் பல்வேறு புத்தாக்கக் கட்டங்கள் உருவாகக் காரணமாக இருந்தவர்.

வித்தியானந்தன் வழிவந்த சால்புகளும், சிந்தனைகளும் சமகாலத் தமிழ்பேசும் மக்களின் சமூக அரசியல் பண்பாடு உட்கிடக்கைகளின் உயிர்ப்புத் தளமாகவும் அமைந்திருந்தன. அவை பன்மைத்துவப் பண்பாட்டின் அடையாளங்களை அடையாளப்படுத்தியும் அவை சார்ந்த கருத்தியல் தளத்தையும் உருவாக்கி நின்றன. தமிழ் உணர்வின் தமிழ்ப் பிரக்ஞையின் உருத்திரட்சிக் கருத்து நிலையின் - தமிழ்தேசியத்தின் - பரப்பாளராகவும் அதன்வழி பல்வேறு புதிய ஆய்வுக் களங்கள் சிறக்கவும் பெருகவும் வழிகாட்டியவர்.



பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும்.

மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது. தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது. இன்றுவரை கல்வி உலகில் முனைவர் சபா. ஜெயராசா உயிர்ப்புமிகு புலமையாளராகவே திகழ்கின்றார்.


சேமமடு

சேமமடு பதிப்பகம்

விலை :50.00

பேராசிரியர் சு.வித்தியானந்தன்

நினைவுச் சொற்பொழிவு -2011



# "உற்றறி கோட்பாடு (CRITICAL THEORY) இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வழிமுறையாதல்"

- சபா.ஜெயராசா -

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழு

கொழும்பு

பேராசிரியர் சு.வித்தியானந்தன்

நினைவுச் சொற்பொழிவு - 2011

# "உற்றறி கோட்பாடு (CRITICAL THEORY) இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வழிமுறையாதல்"

பேராசிரியர் சபா.ஜெயராசா

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழு

கொழும்பு

# வெளியீட்டுரை

நாம் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழுவின் சார்பாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பேராசிரியரது பிறந்த தினமான மே மாதம் எட்டாந் திகதியை (1924) நினைவுகூறும் வகையில் அவரது நூல்களையும் மற்றும் இதுவரை தொகுக்கப்படாத சில கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல்களை யும் இதுவரை வெளியிட்டுள்ளோம். இந்த நூல்களை சேமமடு பதிப்பகம் நினைவுக்குழுவுடன் இணைந்து வெளியிட்டுள்ளது.

2011இல் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுச் சொற் பொழிவாக அவரது மாணவ வழித் தோன்றல்களில் ஒருவரான பேராசிரியர் சபா.ஜெயராசா "உற்றறி கோட்பாடு இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வழிமுறையாதல்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்துகின்றார். இந்த உரையை சேமமடு பதிப்பகம் சிறுநூலாக வெளியிடுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் நினைவுக்குழு சார்பாக பேராசிரியருக்கும் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேராசிரியர் வித்தியானந்தனின் புலமைப் பாரம்பரியமும் ஆய்வு மரபும் இன்னும் பல்வேறு நிலைகளில் விரிவாக்கம் பெறவும் அவரது சிந்தனைகளை சிரத்தைகளை அடுத்த இளந் தலைமுறை யினருக்கு எடுத்துச் செல்லவும் நாம் இவ்வாறான புலமைப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். எமது பணிகள் இன்னும் தொடரும்.

**பேரா.சோ.சந்திரசேகரன்**

*தலைவர்*

*பேரா.சு.வித்தியானந்தன் நினைவுகுழு*

# உற்றறி கோட்பாடு

## இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்

தமிழ் வரலாறு, உயர்கல்வி வரலாறு, கலைவரலாறு, பண்பாட்டு வரலாறு ஆகிய துறைகளிலே தனித்துவமான புலமைப் பங்களிப்பை வழங்கியவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள்.

தமிழர் சால்பை ஆழ்ந்து விரவிய ஆய்வுகள் வழியாக வெளிக் கொண்டுவந்து தனித்துவம் பதித்தவர். உயர்கல்வியிலே தமிழ்மொழியை ஏற்றம் பெறச் செய்த முன்னோடிகளுள் ஒருவராக விளங்கினார். உயர்நிலையில் தமிழ்மொழி வழியான ஆய்வுகளின் தராதரத்தை உயர்த்துவதிலே நேரடியாகப் பங்குகொண்டு உழைத்த புலமையாளர்.

எழு குழாத்தினருக்கு (*Elites*) மட்டுமே உயர்கல்வி என்றிருந்த மேலாதிக்கத்தைத் தகர்ப்பதில் ஈடுபட்ட மானிடப் பண்பின் உறை விடமாகவும் அவர் விளங்கினார். அத்தகைய வினைப்பாட்டின் ஒரு பரிமாணமே நாட்டார் கூத்துக்களைப் பல்கலைக்கழக அரங்கினுக்கு எடுத்துச் சென்றமையாகும்.

பழைமையில் ஆழ்ந்து கால்பதித்து நின்ற பேராசிரியர் புதுமை களை உள்வாங்கி உள்ளமைத்து செம்மொழி நிலையிலும் நவீன நிலையிலும் தமிழியல் ஆய்வுகளை வளம்படுத்துவதற்குத் துணை நின்றார். நவீன ஆய்வுமுறைகளும் புதிய திறனாய்வு முறைகளும் தமிழிலே வளம்பெறுவதற்கு உழைத்த முன்னோடிப் புலமை யாளருள் ஒருவராக விளங்கினார்.

தமிழ்த் தேசியத்தைக் கருத்துநிலையிலும், செயல் நிலையிலும் முன்னெடுத்த அவரின் வினைப்பாடுகள் உலகத் தமிழாய்வு மன்ற இயக்கத்தில் முனைப்பெழல் கொண்டு முடிசூடியது.



அவரின் புலமைப் பணிகளையும், சமூகப் பணிகளையும் கல்வி சார்ந்த அமைப்பியற் பணிகளையும் சிறப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவாக்கற் பணிகளையும் நினைவு கூர்ந்து இந்த உரை அளிக்கை செய்யப்படுகின்றது.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் குடும்பத்தினரும், நினைவுக் குழுவினரும் முன்னைநாள் கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதன் அவர்களும் சேமமடு பதிப்பகத்தினரும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினரும் ஊடகவியலாளரும் நன்றிக்குரிய வர்கள்.

### உற்றறி கோட்பாட்டின் விளக்கம்:

ஆங்கில மொழியில் *"Critical Theory"* என்பதற்குரிய தமிழ் வடிவமாக ***"உற்றறி கோட்பாடு"*** என்பதைப் பயன்படுத்தலாம். இக்கோட்பாடு பற்றிய வரைவிலக்கணம் பின்வருமாறு தரப்படுகின் றது. *"A way to thinking about and examining culture and literature by considering the social, historical and Idelogical force that affect it make it the way it is" (Oxford Dictionary: 2007:364)* சமூகம், வரலாறு மற்றும் கருத்தியல் விசைகள் பண்பாடு மற்றும் இலக்கிய ஆக்கங்களில் எவ்வாறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பது பற்றியும் அதன் எழுவழியை எவ்வாறு உருவாக்குகின்றன என்பது பற்றியும் சிந்திப்பதற்கும் பரிசீலனை செய்வதற்குமான வழிவகையினை இந்தக் கோட்பாடு அமைத்துத் தருகின்றது.

*கலை இலக்கியம் பற்றிய நவமார்க்சியச் சிந்தனைகளிலி ருந்து மேலெழுந்த உயர்ச்சியாக உற்றறி கோட்பாடு* வளர்ந்துள் ளது. மார்க்சிய அழகியற் சிந்தனைகளை வளர்த்துச் சென்ற பிராங் போட் சிந்தனா கூடத்தினர் உற்றறி கோட்பாட்டை வளர்த்து வலுவூட்டினர்.

உற்றறி கோட்பாடு சமூகவியற் சிந்தனைகளை அடியொற்றி வளர்ச்சியுற்று வந்தது. *எவற்றையும் சமூக வரலாற்றுப் பின்புலத் தில் ஊடுருவி ஆராய்ந்து பொருத்தமான தீர்மானங்களைப்*

*புறநிலையாக மேற்கொள்ளல் உற்றறி கோட்பாட்டின் மையப் பொருளாகின்றது.* உற்றறிதலை ஆழ்ந்து மேற்கொள்ளும் எந்தவொரு கோட்பாட்டையும் உற்றறி கோட்பாடு என்று பொது மைப்படுத்தும் "கவிப்புச் சொல்லாகவும்" *(Umbrella Term)* இதனைப் பயன்படுத்துகின்றனர்.

கலை இலக்கிய நிலையில் உற்றறி கோட்பாடு சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடப் பண்பியல் முதலாம் துறைகளிலிருந்து தருக்க நிலைப்பட்ட கருத்துக்களை உள்வாங்கி அழகியற் பரிசீலனைகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்ளும் அறிகைச் செயற்பாடாகக் கொள்ளப்படுகின்றது.

மேலும், நுண்ணிதாக உற்றறி கோட்பாட்டுக்கு விளக்கம் தரப்படுகின்றது. மார்க்சிய நேர்ச் சிந்தனைகளிலிருந்தும் பெறப்பட்ட பொருத்தமான நேர்க்கருத்துக்களையும் உள்ளடக்கிக் கலை இலக்கியங்களையும் குறியீட்டு வெளிப்பாடுகளையும் *(Symbolic Expressions)* விளக்குதல், மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை உற்றறி கோட்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றது. ஒருவகையில் "கலை கலைக்காக" என்ற சமூகப் புறக்கணிப்பு வாதத்துக்கு எதிராக எழுந்த கருத்தியலாக்கமாக இது அமைந்தது. இக்கோட்பாடு அகநிலையிலும் புறநிலையிலும் சமூக இயக்கத்தை நிராகரித்து தூய அழகியல் வாதத்தை வலியுறுத்துகின்றது.

அழகு நித்தியப் பொருள் என்றும் அது அழியாத நிலைத்த வடிவத்தைக் கொண்டது என்றும் ஆதர்ஸ் நோக்கில் கலை இலக்கியங்களை அது அணுகி நிற்கின்றது. சமூக நடப்பியலை நிராகரித்து மனித மனவெழுச்சிக் கோலங்களை மட்டும் மேன்மைப்படுத்தி அழகியற் கட்டுமானத்தை உருவாக்குதல் "கலையின்பம் கலையின் பத்துக்காக" என்ற கருத்தாக்கத்தின் உள்ளடக்கமாயிற்று.

ஐரோப்பாவில் வளர்ச்சி பெற்ற முதலாளிக் கட்டமைப்பு அதன் பரவலும், சிந்தனை மற்றும் அறிவு உற்பத்தியில் அதன் செல்வாக்கும் கலையின்பம் கலையின்பத்துக்காக என்ற கருத்தை மேலோங்கச் செய்தது. ஆழ்ந்து நோக்கும்பொழுது அது சமூக இயங்கியலை



நிராகரிக்கும் முதலாளிய சிந்தனையின் வலுவூட்டலாக அமைதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

**மொழி நிலையில் உற்றறிகை:**

மொழி ஒரு சமூக விளைபொருளாக இருத்தலினால் மொழிக்கும் இலக்கியத்துக்குமுள்ள தொடர்புகளை முதலிலே நோக்குதல் வேண்டும். மொழியியலும் மொழியியல் மாதிரிகைகளும் நவீன திறனாய்வுகளிலே பரவலாக எடுத்தாளப்படுகின்றன. இந்நிலையில் மொழி, மொழியியல், இலக்கியம் ஆகியவை பற்றிய அடிப்படை விளக்கங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

(அ) *மொழி:* நூலியத்தை ஆக்குவதற்குரிய ஊடகமாக மொழி அமைகின்றது.

(ஆ) *இலக்கியம்:* மொழிவாயிலாக உருவாக்கப்படும் நூலிய வடிவமே *(Textual Form)* இலக்கியமாகின்றது.

(இ) *மொழியியல்:* மொழியைப் பற்றியும் மொழியின் பயன்பாடு பற்றியும் எடுத்தாள்கை பற்றியும் ஆராய்வது மொழியியலாகின்றது.

மொழியியலை அடிப்படையாகக் கொண்ட இலக்கியத் திறனாய்வை ரேஜர் பௌலர் என்பார் தாம் எழுதிய "மொழியியல் திறனாய்வு" என்ற நூலிலே விரிவாக்க விளக்கியுள்ளார். *(Fowler, 1986:2)*

மொழி, இலக்கியம், மற்றும் கல்வி ஆகியவற்றுக்கிடையே தொடர்புகளும் இணைப்புகளும் காணப்படுகின்றன. நூலியத்தை ஆழ்ந்து வாசிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் மொழி பற்றிய அறிவு முக்கியமானது.

மொழியில் இலக்கணம் கற்பித்தல் என்பது ஒரு பிரச்சினையாக இன்று எழுந்துள்ளது.

வரன்முறையான விபரண முறையில் *(Formal Discription)* இலக்கணம் கற்பித்தல் மரபு வழியாகப் பின்பற்றப்பட்டுவரும் முறைமையாகும். அதனை அடியொற்றிக் கற்றல் கற்பித்தல் பிரச்சினைகள் பல எழுகின்றன.

வினைத்திறன் கொண்ட தொடர்பாடலுக்கு வசனங்கள் பற்றிய வரன்முறையான விபரணமுறை அறிவு வேண்டியதில்லை என்ற மாற்றுக்கருத்து முன்வைக்கப்படுகின்றது. அதாவது ஒருவருடைய மொழியின் செயற்பாட்டு அறிவுக்கும் அவரது மொழிபற்றிய அறிவுக்குமிடையே வேறுபாடுகள் குறிப்பிடப்படுகின்றன. மொழியியலில் ஏற்பட்ட வளர்ச்சியானது கடந்த கால்நூற்றாண்டுக்கும் மேலாக இலக்கணம் கற்பித்தலிலே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. *பழைய தமிழ்ப்பாட நூல்களையும் நவீன தமிழ்ப் பாட நூல்களையும் ஒப்புநோக்கும் பொழுது அந்த வேறுபாடுகளைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.*

சமூகம் சீரழிவதால் மொழி சீரழிகின்றதென மரபுவழி இலக்கணக் கல்வியை வலியுறுத்துவோர் மேலும் ஒருபடி முன்னேறிச் சென்று தமது கருத்தை முன்வைக்கின்றனர். மொழியின் இந்த இயல்பு இலக்கியங்களிலும் ஊடகங்களிலும் வெளிப்படுத்துவதாக அவர்கள் மேலும் விரித்துரைக்கின்றனர். இதற்கு அனுகூலமாகவும் ஆதரவாகவும் மொழியியல் ஆய்வுகள் அமைவதையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனை மேலும் விளங்கிக்கொள்வதற்கு மொழியியல் சார்ந்த எழுநடையியல் மற்றும் இலக்கியம் சார்ந்த எழுநடையியல் என்ற இரு எண்ணக்கருக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதேவேளை இவ்வாறு பாகுபடுத்தல் பொருத்தமான வகைப்பாடுதானா என்ற வினாவும் எழுப்பப்படுகின்றது. இரண்டும் இலக்கியத்தின் மொழியையே எடுபொருளாகக் கொள்கின்றன. ஆனால் ஒருசாரார் இலக்கியத்தைக் காட்டிலும் மொழியை முன்னுரிமைப்படுத்துகின்றனர். மறுசாரார் மொழியைக் காட்டிலும் இலக்கியத்தை முன்னுரிமைப் படுத்துகின்றனர். *(Carter and Simson, 1989:4)*



அதாவது இலக்கணத்தின் முக்கியத்துவத்தை ஒருசாரார் வலியுறுத்த இலக்கியத்தின் முக்கியத்துவம் மறுசாராரால் வலியுறுத்தப் படுகின்றது. எழுநடையியலின் *(Style)* ஒரு முக்கியமான பரிமாணம் அது இலக்கியத் திறனாய்வை அறிவியற் பாங்கானதாக விஞ்ஞானத் தினுள் அழைத்துச் சென்றுவிடுதலாகும்.

*இலக்கிய ஆக்கங்கள் இலக்கணக் கட்டுமானம் மீது அதிக கவனம் செலுத்துதல் இல்லை.* மாறாக ஒரு சட்ட ஆவணம் இலக்கணக் கட்டுக்கோப்பின் மீது அதிகம் தங்கியிருத்தலையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

மொழி பற்றிய ஆய்வில் அதன் பயன்பாட்டின் முக்கியத்துவத் தைப் பயன்கொள்வாதம் வலியுறுத்துகின்றது. அதன் ஒரு முக்கிய மான பரிமாணம் பேச்சு வினைப்பாட்டின் *(Speech Acts)* பண்புகளை ஆராய்தலாகும்.

மேற்கூறியவற்றின் தொடர்ச்சியில் மொழி பற்றிய அமைப்பியற் கருத்துக்களின் வளர்ச்சி இலக்கிய ஆய்வுகளிலே பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தலாயிற்று. குறிப்பான் என்ற சொல்லுக்கும் குறிப்பீடு என்ற பொருளுக்குமிடையே உள்ள தொடர்புகளை சசூர் விளக்கிய, மையைத் தொடர்ந்து அமைப்பியல் ஆய்வுகளிலே வளர்ச்சி மேலும் ஏற்படலாயிற்று. *(Saussure, 1974:6-7)*

*குறிப்பானுக்கும் குறிப்பீட்டுக்குமுள்ள தொடர்பு தன்னிச்சையானதும் எழுந்தமானதுமாகும். இரண்டினுக்குமிடையே இயற்கையான தொடர்புகள் எதுவுமில்லை.*

அமைப்புக்கள் இயற்கையால் ஈட்டப்படுதல் இல்லை. அவை சமூகத்தால் உருவாக்கப்படுவதாக அமைப்பியலாளர் குறிப்பிடுவர். ஒலி அலகுகளை வைத்துக்கொண்ட எண்ணற்ற சொற்களை மனிதர் உருவாக்கிக் கொள்கின்றனர். இலக்கிய வடிவங்கள் அமைப்பியலின் தொகுதிகளாகின்றன. அமைப்பியலின் ஒரு முக்கியமான மட்டுப் பாடு அது வரலாறு மற்றும் சந்தர்ப்பங்கள் என்ற புறவிசைகளின் தாக்கத்துக்கு உள்ளாகாமல் இருக்கும் என்ற முன்மொழிவாகும்.

சசூர் மொழி என்பதற்கும் *(lan gue)* பேச்சு என்பதற்கும் *(Parole)* இடையே வேறுபாடுகளை முன்வைத்தார். மொழி என்பது பொதுவான தொகுதியைக் குறிப்பிடும். பேச்சு என்பது தனிநபரின் தனித்த தெரிவுக்கு உட்பட்டது. அதாவது தனியாளின் வினைப்பாடு பேச்சாகின்றது. மொழி என்பது கூட்டுமொத்தமான தொகுதியைக் குறிப்பிடுகின்றது.

தனியாளின் மொழித்தனித்துவம் மரபுவழியான இலக்கணக் கட்டமைப்புக்களில் வலியுறுத்தப்படவில்லை.

மொழியைப் போன்று இலக்கியமும் கட்டமைப்புச் செய்யப் பட்ட வடிவமென்று அமைப்பியலாளர் குறிப்பிடுவர். அதனைப் பெருநிலை இலக்கணம் *(The Macro - Level Grammar)* என்று குறிப் பிடுவர். அதாவது மொழியின் அடிப்படையான செயலமைப்பு இன்றி இலக்கியத்தை உருவாக்கிவிட முடியாது. இலக்கியத்தின் இலக்கணத் தைக் கண்டறிவதில் அமைப்பியல் தீவிர கவனம் செலுத்துகின்றது.

பெருநிலையில் நூலியத்தின் உருவாக்கத்தின் அடிப்படையாக இருக்கும் கட்டமைப்புக்கள் நோக்கப்படும் நுண்பாக நிலையில் *(The Micro level)* சிறிய அலகாக இருக்கும் வசனங்களுக்கும் நூலியத் துக்குமுள்ள தொடர்புகள் அறியப்படும். அது தனித்த ஒரு நூலி யத்தை மட்டுமே குவியப்படுத்தி மேற்கொள்ளப்படும். ஆனால் பெருநிலையில் அனைத்து நூலியத்துக்குமுரிய பொது இலக்கணமும் அமைப்பு விதிகளும் கண்டறியப்படும். (நுண்பாக நிலை ஆய்வுகள் ஒப்பீட்டளவில் எளிதானவை)

வசனங்கள் இன்றி கருத்து வினைப்பாடுகளை *(Discourses)* மேற்கொள்ள முடியாது. வசனங்களின் ஒழுங்கமைப்பினால் கருத்து வினைப்பாடு கட்டமைப்புச் செய்யப்படுகின்றது. *அது இன்னொரு வகையான மொழியாக முகிழ்த்தெழுகின்றது.* *(Barthes, 1977: 823)* வசனங்களுக்கு மேலான செயற்பாடுகள் கருத்து வினைப் பாட்டிலே தொழிற்பட்ட வண்ணமிருத்தல் அதன் விளக்கமாகின்றது.



**எடுத்துரைப்பியல்:**

இதனை மேலும் விளங்கிக் கொள்வதற்கு *"எடுத்துரைப்பியல்"* *(Narratology)* பற்றி விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துரைப்பு மனித வாழ்வின் அடிப்படையான பண்புகளுள் ஒன்றாக அமைகின்றது.

இலக்கிய ஆக்கத்தில் எடுத்துரைப்பு சிறப்பான செயற்பாடாக இருத்தலினால் அது பற்றி விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. எ.எம். பொஸ்டர் என்பார் தாம் எழுதிய நாவலின் பண்புகள் *(Aspects of the Novel, 1926)* என்ற நூலில் *கதை (Story)* என்பதற்கும் *பொதிவு (Plot)* என்பதற்குமிடையே வேறுபாட்டை வலியுறுத்தியுள்ளார்.

அ. "அரசன் இறந்தான் அதைத் தொடர்ந்து அரசியும் இறந்தாள்" என்பது *கதை.*

ஆ. அரசன் இறந்தான் அந்தச் சோகத்தில் அரசியும் இறந்தாள் என்பது *பொதிவு.*

பொதிவு என்பது நிகழ்ச்சியின் காரணங்களை உளநிலை அமை வுடன் தொடர்புபடுத்தி நிலை மாற்றம் செய்கின்றது. எடுத்துரைப்பில் இந்த இருநிலைகளையும் பற்றி வேறு பல திறனாய்வாளரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நிகழ்ச்சிக்குரிய காரணம் பற்றிய புனைவு கதையைப் பொதி வாக மாற்றி விடுகின்றது என்று பொஸ்டர் குறிப்பிட்டுள்ளார். அதாவது கதையைக் கருத்து வினைப்பாடாக மாற்றி விடுகின்றது.

எடுத்துரைப்பியல் ஆய்வாளர்களுள் முக்கியமான ஒருவராக விளாடிமிர் புரொப் விளங்குகின்றார். ரூசிய நாட்டார் கதைகளில் ஏழு தளங்களில் வினைப்பாடு நிகழ்வதாக அவர் சுட்டிக்காட்டினர். அவை:

1. வில்லன்
2. வழங்குனர்
3. துணைசெய்பவர்
4. நபரைத் தேடல்

5. எடுத்துத் தருபவர்

6. தலைவர்

7. போலித்தலைவர்

கிறிமாஸ் *(Greimas)* என்பவர் எடுத்துரைப்பின் தொடரணியைப் பின்வருமாறு அடுக்கமைத்துக் காட்டுகின்றார்.

(1) ஆற்றுகை மற்றும் செயற்பணி முதலியவற்றைத் தொடர்புபடுத்துதல்.

(2) முடிவை நோக்கிய வினைப்பாடு.

(3) கதை அசைவும் பெயர்ச்சிகளும்

(4) வினைப்பாடுகளைக் கோடல் *(Code)* செய்தல், தொடர்ச்சியாக பொதிவை ஒழுங்கமைத்தல்.

(5) புதிர்களைக் கோடல் செய்தல்.

(6) பண்பாட்டைக் கோடல் செய்தல்.

(7) நபர்களையும் பாத்திரங்களையும் கோடல் செய்தல்.

(8) குறியீட்டுக் கோடல் செய்தல்.

கோடல் *(Code)* என்பது குறியீடுகளுக்குப் பொருளுரைக்கும் ஒழுங்கமைந்த விதிகளைக் குறிப்பிடுகின்றது. பார்த் அவர்கள் தாம் எழுதிய S/Z என்ற நூலில் *(Barthes, 1974)* எடுத்துரைப்பின் அமைப்பியற் பகுப்பாய்வையும் கோடல்களையும் அவற்றின் விளக்கங்களையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

(1) கதையின் ஒவ்வோர் வினைப்பாட்டு அலகையும் விளக்கும் கோடல். சிறிய வினைப்பாட்டிலிருந்து பெரிய வினைப்பாடுகள் வரை அது அமையும். ஆனால் கூறியது கூறல் அங்கு இடம்பெறாது.

(2) புதிர் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய கோடல் - அவை தீர்க்கப்பட்டவையாயிருக்கலாம் - அல்லது தீர்க்கப்படாதவையாயிருக்கலாம்.



(3) பண்பாட்டுக் கோடல் - அனைத்துக் கூறுகளும் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படத்தக்க அறிவுடன் தொடர்புடையனவாயிருக்கும்.

(4) அறிபொருட் பண்புகளை உள்ளடக்கிய கோடல் - கதாபாத்திரங்களில் அவை உட்பொதியப்பட்டிருக்கும்.

(5) குறியீட்டுக் கோடல் - குறியீடுகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை இது குறிக்கும்.

கதை மரபும் எடுத்துரைப்பு மரபும் தமிழில் தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட செயற்பாடுகளாக இருப்பினும் அமைப்பியற் கண்ணோட்டத்தில் அவற்றை ஆராயும் பொழுது எமது பண்பாடு பற்றியும் எமது ஆக்கமலர்ச்சியின் இயல்புகள் பற்றியுமான புரிதல் மேலும் வளர்ச்சியடையும்.

**உற்றறிகையில் வரலாறு:**

அடுத்து இலக்கிய வரலாறு என்பதற்கு வரலாம். வரலாறு பற்றிய பழைய விளக்க முயற்சிகள் ஒரு புறமிருக்க மிசேல் பூக்கோ போன்றோரால் மாற்று விளக்கங்களும் முன்வைக்கப்படுகின்றன.

மரபுநிலையில், வரலாறு பற்றிப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அது உறுநேர்வுகளின் *(Facts)* திரட்டு என்றும் நிகழ்ச்சிகளின் சேர்மானம் என்றும், உலகின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய ஒழுங்கமைந்த விபரணம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இதற்கு மாற்றுக் கருத்துக்களும் உண்டு.

மாறுபாடான கருத்தை முன்வைத்தவர்களுள் மிசேல் பூக்கோ முக்கியமானவர். ***அது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான ஏற்பாடு என்றும், குறிப்பிட்ட காலகட்டங்களில் அதிகாரத்தில் மேலோங்கியோரின் கருத்துவினைப்பாடுகளையே வரலாறு கொண்டுள்ளது என்றும் குறிப்பிடுகின்றார்.*** *(Focault, 1986:90)* அறிவு என்பது விளக்கத்தின் வழியாக உருவாக்கப்படவில்லை, அறிவைச் சிதைக்கும் செயற்பாட்டையே வரலாறு என்ற அறிவு மேற்கொண்டு வந்துள்ளதாக பூக்கோ குறிப்பிடுகின்றார்.

இலக்கிய வரலாறு பல்வேறு செயற்பாடுகளை ஆற்றுகை செய்கின்றது. அவை:

(1) கடந்தகால இலக்கியங்கள் மீது கவனம் செலுத்துதல்.

(2) இலக்கிய ஆக்கங்களையும் ஆசிரியர்களையும் தேர்ந்தெடுத்தல்.

(3) பண்புகளின் அடிப்படையில் இலக்கியங்களை ஒழுங்கமைத்தல்.

(4) இலக்கியம் தொடர்பான எடுத்தியம்பலை உருவாக்குதல்.

(5) கடந்தகாலச் சிந்தனைகளை நிகழ்காலத்துக்குக் கொண்டு வருதல்.

சமூக வளர்ச்சியும் மாற்றங்களும் இலக்கியங்களிலே புதிய வடிவங்களைத் தோற்றுவித்தலால் கலைகள் சமூக விளைபொருளா கும் என்ற மார்க்சியக் கருத்தியலுக்கு வலுவூட்டுகின்றன. ஆசிரியரின் நோக்கம், சொற்கட்டுமானம், அது ஏற்படுத்தக்கூடிய நுகர்ச்சி விளைவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கவிதை, சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்கள் பிரித்தறியப்படுகின்றன. இவ்வடிவங்கள் தமக்குரிய ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பதுடன், பிறவடிவங்க ளில் இருந்து பிரித்தறியக் கூடியவாயுமுள்ளன. இவையனைத்தும் மொழி என்ற குறியீடுகளால் சமூக நிலவரங்களை அடியொற்றி ஆக்கப்படுகின்றன.

சமூக நிலவரங்களை அடியொற்றிக் கலை இலக்கியங்களும் அழகியல் நோக்கும் மேலெழுகின்றன என்பது மார்க்சியத்தின் தரிசனம் அதனை அடியொற்றியும் நிராகரித்தும் பல வாதங்களும், எதிர் வாதங்களும், புதிய வாசிப்புக்களும் மேலெழுந்தன.

பொருண்மிய அடிப்படை *(Base)* பின்வரும் வினாக்களை உள்ளடக்கியது.

(1) எது உற்பத்தி செய்யப்படுகின்றது எது ஆக்கம் செய்யப் படுகின்றது?

(2) உற்பத்தியை யார் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்?

(3) உற்பத்திகள் எங்கு மேற்கொள்ளப்படுகின்றன?



(4) உற்பத்திகள் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன?

(5) உற்பத்தியாலும் விநியோகத்தாலும் ஏற்படும் விளைவுகள் யாவை?

பொருண்மிய உற்பத்திக்கும் இலக்கிய உற்பத்திக்குமுள்ள தொடர்புகள் பற்றிப் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படு கின்றன.

(1) இலக்கிய உற்பத்தி பொருள் உற்பத்தியோடு நேரடியான தொடர்புடையது.

(2) மறைமுகமான தொடர்புடையது.

(3) தொடர்புகள் எதுவுமில்லை.

மேற்கூறிய கருத்துக்கள் உற்றறி நிலைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளன.

**இலக்கியமும் கருத்தியலும்:**

மரபுவழி மார்க்சியத் திறனாய்வு எந்தவொரு இலக்கியப் படைப்பும் குறிப்பிட்ட சமூக இயல்பினதும் சந்தர்ப்பத்தினதும் விளைவாக உருவாக்கம் பெறுதலை விளக்குகின்றது. அடிக்கட்டு மானத்திலிருந்து விலகுதல் எதிர் மார்க்சியத் திறனாய்வாளரால் பரவலாக முன்னெடுக்கப்படுகின்றது.

மார்க்சியத் திறனாய்வில் ஒரு சிறப்பு எண்ணக்கருவாக "கருத்தியல்" *(Ideology)* என்பது எடுத்தாளப்படுகின்றது. குறிப்பிட்ட வர்க்கத்துக்குரிய கருத்துக்களின் தொகுதியே கருத்தியலாகின்றது. இலக்கிய ஆக்கங்கள் கருத்தியலின் வெளிப்பாடுகளாக இருத்தல் குறிப்பிடப்படுகின்றது.

பொருள்சார் நடைமுறைகளின் பிரதிநிதித்துவத்தின் தொகுப்பாக கருத்துருவம் அமைகின்றது. சமூக வலைப்பின்னலிலே தாம் யார் என்பதை உற்றுணர்வதற்கு அது துணைசெய்கின்றது.

சமூக வரலாற்றுக்கும் கருத்தியலுக்கும், இலக்கியப் படைப்புக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லையென்ற மாற்றுக் கருத்தினை முன்வைப்போர் அதனைப் புறவயமாக நிறுவ முடியாத இடர்களை எதிர்நோக்குதலையும் காணக்கூடியதாகவுள்ளது.

சமூகப் பிரதிநிதித்துவப்படுத்தலின் அமைப்பு அல்லது அதன் கட்டுமானம் சமகாலத்தைய மார்க்சியத் திறனாய்வுகளில் முக்கியத்து வம் பெற்று வருகின்றது. லுசியான் கோல்டுமன், பியரி மச்செரி முதலியோர் இத்துறையிலே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இலக்கியப் பொருட்களும் சமூகமும் கலைப்படைப்பிலே செழுங்கலவை *Blen* செய்யப்படுகின்றன என்று பியரிமச் செரி குறிப்பிட்டுள்ளார். *(Pierre Macherey, 1978-154)*

சமூகத்துக்கும் இலக்கியப் படைப்புக்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை மார்க்சியம் சுருங்கிய வாய்ப்பாட்டுக்கு உள்ளடக்க வில்லை. பன்முகப் பரிமாணங்களை அடியொற்றி விரிந்த நிலை யிலேதான் விளக்குகின்றது. ஆனால் ஒடுங்கிய ஒரு விளக்கத்தை எதிர் மார்க்சியவாதிகள் கொடுத்து அதனை அடியொற்றிய திற னாய்வுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மார்க்சியம் முன்வைத்த கருத்தியல் என்ற எண்ணக்கருவும் அவர்களால் தவறாகவே பயன்படுத்தப்பட்டு வருதலைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

**அகநோக்குப் பற்றிய உளவியல்:**

நவீன இலக்கிய ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் எண்ணக்கருக் களில் அகவியம் *(Subjectivity)* என்பதும் முக்கியத்துவம் பெறுகின் றது. ***ஒருவருக்கே உரிய தனித்துவமான எண்ணங்களின் தொகுதியாகத் தன்னிலை வெளிப்படுத்துதலே அகவியமாகின் றது.*** அகவியத்தை உருவாக்குவதில் நனவிலி உள்ளம் வகிக்கும் பங்கின் முக்கியத்துவத்தை உளப்பகுப்பு உளவியலாளர் பலநிலை களிலே வலியுறுத்தியுள்ளனர்.



ஆழ்மனம் என்ற நனவிலி மனத்தின் அகவிய வெளிப்பாடே இலக்கியம் என்பது உளப்பகுப்பியலாளரின் கருத்து. குழந்தை நிலையிலிருந்தே ஒருவரிடத்து நிறைவேற்றப்படாத ஆசைகளும், இச்சைகளும் விருப்புக்களும் நனவிலி உள்ளத்திலே அடக்கியும் இறுக்கியும் வைக்கப்படுகின்றன. *(Freud), 1957:122)* அவ்வாறான அடக்கலும் அழுத்தலும் கலை இலக்கியங்கள் வழியாக மொழி வடிவமெடுக்கின்றன.

உள்ளம் இட் ஈகோ, சுப்பர் ஈகோ என்ற அமைப்புக்களைக் கொண்டது. இந்த மூன்று அமைப்புக்களையும் நரகம், உலகம் சுவர்க்கம் என்ற எண்ணக்கருக்களை அடிப்படையாக வைத்து பிராய்ட் விளக்கினார்.

இட் என்பது மிருக உணர்ச்சிகளின் தொகுதி, சமூக வாழ்க்கை அந்த மிருக உணர்வுகளைச் செப்பமிட்டு இசைவாக்கம் செய்கை யிலே ஈகோ தோற்றம் பெறுகின்றது. சுப்பர் ஈகோ என்பது உயர்ந்த இலட்சியங்களையும் விழுமியங்களையும் கொண்ட பகுதி.

மனம் மேற்கொள்ளும் கனவு வேலை நனவிலி உள்ளத்திலே அடக்கி வைக்கப்பட்டவற்றை வெளிப்படுத்தும் செயற்பாடாகின்றது. உளப்பகுப்பியல் கலை இலக்கியங்களை கனவு வேலையாகவே கருதுகின்றது. நனவிலி மனத்தின் விடுகற்பனைகள் கலை இலக்கிய ஆக்கங்களிலே குறித்த விளைவுகளை ஏற்படுத்துமாறு கையாளப்படு கின்றன. பால்மை வழியாக எழும் சிக்கல் ஈடிப்பஸ் சிக்கலால் விளக்கப்படுகின்றது.

இச்சைகளையும் ஆசைகளையும் ஒருவர் ஆழ்மனத்திலே அடக்கி அழுத்துதல் தனிமனிதருக்குரியது மட்டுமல்ல சமூகத்தின் இயல்பே அத்தகைய ஒருநிலையை உருவாக்கி விடுகின்றது என்று எரிக்புரோம் என்பார் உளப்பகுப்பு இயலை மார்க்சிய நோக்கிலே விளக்க முயன்றார்.

மேலும் உளப்பகுப்பியல் ***ஆண் ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்பதைப்*** பெண்ணிய ஆய்வாளர் வேறொரு கண்ணோட்டத்தில் விளக்க முற்படுகின்றனர்.

உளப்பகுப்பியலிலும் நவீன கலை இலக்கிய ஆய்வுகளிலும் அதிகம் பேசப்படும் ஒருவராக லகான் விளங்குகின்றார். அவரும் பெண்ணியவாதிகளின் அதிக கண்டனங்களுக்கு உள்ளாக்கப்படும் ஒருவராகவும் இருக்கின்றார்.

குழந்தை தனது செயற்பாடுகளின்போது தனது உடலின் மட்டுப்பாடுகளை விளங்கிக்கொள்ளாது கற்பனை நிலையிலே தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது. குழந்தையின் ஆரம்பகாலத்து அனுபவங்கள் உந்தல்களின் திரட்டலாகவேயுள்ளன. அவ்வாறு வளரும் குழந்தை கண்ணாடிப் பருவத்திலிருந்து தன்னை இனங் காணத் தொடங்குகின்றது *(Lacan, 1977:4)* ***இப்பருவத்திலிருந்து கற்பனைச் செயற்பாடுகள் குறியீட்டு வடிவப் பிரதிநிதித்துவப் படுத்தலாய் மாற்றம் பெறுகின்றன.***

லகானுடைய ஆய்வுகளில் முக்கியமானது மொழி பற்றிய அவரது கண்ணோட்டமாகும். அவர் உளப்பகுப்பியலையும் மொழியையும் தொடர்புபடுத்தி நனவிலி மனம் மொழி போன்று கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கட்டமைப்புவாதிகள் குறிப்பான் என்ற ஒன்றுக்கும் குறிப்பீடு என்ற ஒன்றுக்கும் என்றவகையில் ஒன்றுக்கு ஒன்றான இணைப் பைக் குறிப்பிட்டுள்ளனர். *(One To One Relation)*

மரபு வழியான மொழிக் கட்டமைப்புக் கோட்பாட்டை லகான் மறுத்துரைக்கின்றார். *ஒரு குறிப்பான பல்வேறு குறிப்பீடுகளை உருவாக்கவல்லது என்று அவர் விரித்துரைத்துள்ளார்.* சில சமயங்களில் குறிப்பான் என்பது குறிப்பீட்டின் மேலான ஆதிக்கத் தையும் செலுத்தி விடுகின்றது. கழிப்பறை எடுத்துக்காட்டின் வாயிலாக அதனை அவர் விளக்குகின்றார். கழிப்பறை ஆண்க ளுக்கும் பெண்களுக்கும் பொதுவானது. ஆனால் ஆண் பெண் என்ற குறிப்பான்கள் பண்பாட்டின் வழியாக மேலதிகாரத்தை எடுத்துக் கொள்கின்றது. மேலும் குறிப்பான் பல்வேறு குறிப்பீடுகளை உருவாக் குவதற்குக் காரணம் ஒவ்வொருவரதும் நனவிலியின் இயல்பாகும். ***சிறுவயதிலிருந்தே நனவிலி மனத்திலே திரட்டி வைக்கப்பட்***



*டுள்ள அனுபவங்கள் குறித்த ஒரு குறிப்பானுக்குப் பல்வேறு குறிப்பீடுகளை உருவாக்கிய வண்ணமுள்ளன.*

உணர்வுகள் நனவிலி மனத்தில் மொழி வடிவிலே கட்டமைப் புச் செய்யப்பட்டுள்ளன. பால்மை உள்ளிட்ட சமூக அமைப்புக்கள் குறியீடுகளாக அங்கே உட்பொதியப்பட்டுள்ளன. ஒவ்வொருவரதும் நனவிலியின் இருப்புக்கும் இயல்புக்கும் ஏற்றவாறு குறிப்பிட்ட ஒரு குறிப்பானுக்குப் பல்வேறு பொருள் கொள்ளும் நிலை ஏற்படுகின் றது. அத்துடன் குறிப்பீடு என்பது ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குப் பெயர்ந்து செல்லக்கூடியதாகவுமுள்ளது.

**வாசகரும் கட்டுமானக் குலைப்பும்:**

லகானுடைய கருத்துக்கள் ஒரு நூலியத்துக்குரிய பல்வேறு வாசிப்புச் செயற்பாட்டை உளப்பகுப்பியற் கண்ணோட்டத்தில் விளக்குகின்றன. ஒவ்வொருவரதும் நனவிலி மொழியமைப்பு வேறுபடுவதனால் குறிப்பிட்ட ஓர் இலக்கியத்துக்குப் பல்வேறு பொருள் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

வாசகரை முதன்மைப்படுத்தும் கோட்பாட்டை பார்த் முன் வைத்தார். "நூலாசிரியரின் இறப்பு"ப் பற்றிய மொழிவை அவர் முன்வைத்தார். *(Barthes, 1977)* அமைப்புவாதம் நூலியத்தை நடுநாயகமாகக் கொண்ட *(Text Centred)* அணுகுமுறையை வலியுறுத் தியது. அவ்வாறு வலியுறுத்தியவேளை நூலியத்தை மீள்வாசிப்புச் செய்வதற்குரிய வழியையும் திறந்துவிட்டது. கருத்துக்கொள்வதற் குரிய செயலமைப்பின் மீது அது கவனம் செலுத்தியமை நூலியத் தைத் தகர்ப்பதற்குரிய செயலுக்கும் வழியமைத்தது.

வாசிப்பு என்பது வாசகர்களுக்கிடையே வேறுவேறுபட்ட பொருள் கோடலுக்கு இடமளிப்பது மட்டுமன்றி காலவோட்டத்தி லும் வேறு வேறுபட்ட பொருள் கோடலுக்கும் இடமளிக்கவல்லது. வாசிப்புச் செயல்முறை நிலைத்தது அன்று அது இயக்கமுள்ள ஒரு செயல்முறை *(dynamic process)* இன்னொரு விதமாகக் கூறுவதா னால் அது நீர்ம்மை *(Fluid)* இயல்புடையது. இவற்றை அடியொற்றியே

நூலியத்தின் கட்டுமானக் குலைப்பு அல்லது தகர்ப்பு *(Deconstructing The Text)* பிறிதொரு கண்ணோட்டத்தில் விளக்கப்படுகின்றது.

தெரிதா "வேற்றமைவு" *(Differanc)* என்ற எண்ணக்கருவை இத்துறையிலே முன்வைக்கின்றார். *(Derrida, 1982:27)* ***ஒரு குறிப்பீட்டிலிருந்து மற்றைய குறிப்பீடு எண்ணிறைந்த வகையிலே வேறுபடுதலை அது புலப்படுத்துகின்றது.*** அவ்வாறான வேறுபாட்டுத் தொகுதியால் மொழி உருவாக்கப்படுகின்றது. வேறுபட்டுச் செல்கையில் அதற்குரிய கருத்தும் உறுதிகுலைந்து விடுகின்றது. மேற்கூறிய கருத்தமைவை அடியொற்றியே அவர் கட்டுமானக் குலைப்பு என்ற செயற்பாட்டை விளக்குகின்றார்.

வாசிப்புச் செயற்பாடு அகவயப்பட்ட செயற்பாடாக இருக்கும் நிலையில் வாசகரின் அகநிலைக்கும் அனுபவ நிலைக்கும் ஏற்ற வகையிலே பொருள் கோடலும் பல பல நிலைகளாகவும் கிளைகளாகவும் விரிவுபட்டுச் செல்லும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

**பெண்ணிய உற்றறிகை:**

கலை இலக்கியம் பற்றிய விளக்கம் பெண்ணியத்துடன் தொடர்புடையது. பெண்ணியக் கருத்தியல் முனைப்புக்கள் பின்வருமாறு அமைகின்றன.

(1) சமூகத்தாற் கட்டுமை செய்யப்பட்ட பால்நிலைத் தொடர்புகளை மாற்றியமைத்தலும் அதற்காக வினைப்படலும்.

(2) பெண்களின் அனுபவங்கள் நேர் நிலையிலும் எதிர்நிலையிலும் கலை இலக்கியங்களில் எவ்வாறு புனையப்பட்டுள்ளன என்பவற்றைக் கண்டறிதலும் மீள்வாசிப்புக்கு உட்படுத்துதலும்.

(3) நடப்பியலில் உள்ள அதிகாரக் கட்டமைப்பையும் அதன் பின்புலமாக அமையும் அரசியலையும் மாற்றியமைத்தல்.

(4) பண்பாட்டில் ஊடுருவி உட்பொதிந்துள்ள ஆண் ஓங்கற் செயற்பாடுகளுக்கு எதிரான வினைப்பாடுகளை முன்னெடுத்தல்.



(5) மொழி நிலையில் ஆண் ஓங்கற் கட்டுமானங்களை இனங்காட்டுதலும் மாற்றியமைத்தலும்.

(6) கல்வி, தொழில், முகாமைத்துவம், அரசியல் என்ற அனைத்து நிலைகளிலும் பால்நிலைச் சமத்துவத்தை முன்னெடுத்தல்.

1960 ஆண்டைத் தொடர்ந்து பெண்ணியத்தின் இரண்டாம் அலை *(Second Wave)* தோற்றம் பெற்றது. அதன் வெளிப்பாடாகப் பெண்ணியத் திறனாய்வில் பின்வருவன குவியமாக்கப்பட்டன.

(1) பெண்களின் எழுத்தாக்கங்கள் வெளியீட்டாளர்களால் தவிர்க்கப்பட்டமையும் உயர்கல்விப் புலமைநிலையில் பெண் ஆய்வுகள் புறக்கணிக்கப்பட்டமையும் என்ற நடப்பியல் நிலவரங்களை வெளிப்படுத்துதல்.

(2) பெண்கள் தமக்குரிய தனித்துவமான உணர்வுகளைக் கலை இலக்கியங்களிலே ஊறுபடாது வெளிப்படுத்துதல்.

(3) அத்தகைய தனித்துவமான வெளிப்பாட்டுக்குரிய பொருத்தமான பெண்மொழியை உருவாக்குதல்.

(4) பெண்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஒற்றை நலிவு வகைமையை *(Stereo Type)* த் தகர்த்து மாற்றியமைத்தல்.

ஆண்மை ஓங்கலின் தராதரங்களைப் பெண்களும் எட்டல் வேண்டும் என்ற கருத்துப் பெண்ணிய எழுத்தாக்கங்களில் வளர்ச்சியுறலாயிற்று. ஆண் ஓங்கலை அடியொற்றியும் நடுநாயகப்படுத்தியும் உருவாக்கப்பட்ட மொழியையும் அதனை அடியொற்றிய இருநிலை *(Binary)* எதிர்வடிவங்களையும் அவற்றில் உட்பொதிந்த ஒடுக்கு முறைகளையும் ஆய்வாளர் வெளிப்படுத்தினர் *(Cixous and Clement, 1986:15)*

பெண்ணிய நோக்கு கலை இலக்கியத்திறனாய்வுகளிலே ஆழ்ந்தும் அகன்றும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆண் ஓங்கற் கட்டுமானத்தை *(Masculinity)* மாற்றியமைத்தலும் தகர்த்தலும் கலை இலக்கியத் திறனாய்வுகளிலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெண்ணியத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு ஆண் ஓங்கற்கட்டுமானத்தை மீள் வரைவிலக்கணப்படுத்தும் வகையில் ரோவினா சப்மன் *"புதிய மனிதன்" (New Man) என்ற கருத்துரு வத்தை முன்வைத்துள்ளார். (Chapman, 1988:226)* புதிய மனிதன் நுகர்வுச் சமூகத்தின் கண்டுபிடிப்பாக முகிழ்த்தெழுந்துள்ளான். பாரம் பரியமான பெண்கள் மேற்கொள்ளும் குடும்பச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அந்தப் புதிய மனிதன் எங்கும் உலா வருகின்றான். விளம்பரங்களிலும் முகம் காட்டுகின்றான். பெண்ணியக் கருத்திய லின் தேவைகளுக்கு இயைபுபடுகின்றான்.

அவ்வாறு உருவாக்கம் பெற்ற கருத்தியலை அடியொற்றிய கலை இலக்கிய ஆக்கங்களும் மேற்கிளம்பத் தொடங்கிய வண்ணமுள்ளன. ஆண்கள் மரபுவழியான புனைவுகளும் காட்சிப்படுத்தலும் கட்டுமைகளும் தகர்த்து நொருக்கப்படுகின்றன.

**புதிய எழுச்சிகள்:**

கலை இலக்கிய ஆக்கங்களிலும் திறனாய்வு முயற்சிகளிலும் புதிய புதிய எழுச்சிகள் தோற்றம் பெற்று வருகின்றன. அவ்வகை யிலே பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

(1) முதலாளியத்தின் புதிய வளர்ச்சிக் கோலங்களும் பொதுக் கவர்ச்சிக் கலை *(Popular Art)* யின் வளர்ச்சியும்.

(2) பின்காலனியம், கிழக்கியல் *(Orientalism)* முதலாம் கோட்பாடு களின் வளர்ச்சி.

(3) ஓரங்கட்டப்பட்ட விளிம்புநிலை உணர்வுகளை வெளிக் கொண்டு வருதல்.

(4) புலச் சிதறல் *(Diaspora)* மற்றும் தேசிய இனங்களின் அடை யாள நெருக்கடி முதலியவற்றை அடியொற்றிய புதிய கலை இலக்கிய வடிவங்களின் எழுச்சி.

(5) ஐரோப்பிய மைய வாதத்தின் ஆதிக்கப் பரிமாணங்கள் வெளிக்கொண்டுவரப்படுதலும், மேலாதிக்கத்தினாற் கட்டுமை செய்யப்பட்ட மொழியை உடைத்தலும்..



(6) ஒடுக்குமுறைக்கு எதிராக அறைகூவல் விடுக்கும் தலித்தியமும் உற்றெழலும் *(Resistance).*

சமூக நிலவரங்களின் தொடர் மாற்றங்களும் அதன் வழியாகத் தெறித்தெழும் அறிவுத் தேவைகளும், அறிகை இடைவெளிகளை நிரப்பும் செயற்பாடுகளும், கோட்பாடுகளையும் முடிவிலியாய் உருவாக்கிய வண்ணமுள்ளன. அந்நிலையிலே கலை இலக்கியங்கள் பற்றிய புலக்காட்சியைப் புரிந்துகொள்ளவும், பொருள் கோடலை ஆழப்படுத்திக்கொள்ளவும் வளர்ந்து வரும் மார்க்சிய அறிவை உள்வாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

சோசலிசப் புரட்சியை உருவாக்கிய நாடுகளின் மேலோங்கிய கருத்தியலாக முதலாளியம் வலிமை பெற்று வரும் நிலையில் உற்றறி கோட்பாட்டை மேலும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண் டிய தேவை சமூவியலும் மானிடப் பண்பியலிலும் எழுந்துள்ளது.

உற்றறிகோட்பாடு பலநிலைகளிலும் சமூகத்தையும் இலக்கி யங்களையும் அறிவதற்குரிய வாயில்களைத் திறந்து விடுகின்றது.

***References:***

1. *Barthes, R. (1974) A/Z New York: Hill and Wang*
2. *Barthes, R. (1977) Image/ Music/ Text, London: Fontana*
3. *Carter, R. and Simpson, P (1989) Language, Discourse and Literature, London: Unwin Hyman.*
4. *Chapman, R. (1988) Male order, London: Lawrence and Wishart.*
5. *Cixous, H. and Clement (1980) The newly born women, Manchester: Manchester university.*
6. *Derrida, J. (1982)Margins of philosophy Herfordshire: Harvester.*
7. *Focault, M. (1986) The Focault reader, Herfords worth: Penguin.*
8. *Foster, E.(1971) Aspects of Novel, London: Penguin.*
9. *Fowler, R.(ed) (1986) Linguistic Criticism Oxford: Oxford university press.*
10. *Freud, S.(1954)Collected Papers - Vol-V London: The Hogarth Press.*
11. *Lacan, J.(1977) Ecrits, London. Tavistock Publications.*
12. *Macherey,P. (1978) A Theory of Literary Production, London: Routledge and Kegan Paul.*

*குறிப்பு:நூல்களைப் பெற்றுக் கொள்ள உதவிய கொழும்பு பிரித்தானிய கழக நூலகத்துக்கு நன்றி:*

*- சபா.ஜெயராசா-*